# உணர்வுகளும் உணர்ச்சிகளும்

ஒரு மனிதனிடமிருந்து வெளிப்படும் உணர்வுகளும் உணர்ச்சிகளும் அவனை அடையாளப்படுத்தும். இறைவனால் மனிதருக்கென பிரத்தியோகமாக கொடுக்கப்பட்ட கூடுதல் பரிசு , பருவங்கள் அடங்கிய மனித வாழ்க்கையில் அந்தந்த பருவத்திற்குரிய உணர்வுகள் மேலோங்கி நிற்கிறதைக் காணலாம். நம்மை உருவாக்கின ஆண்டவர் நம்மை உணர்வும் உணர்ச்சியும் அற்றவர்களாக உருவாக்கி இருந்தால் நாம் ஒரு எந்திர மனிதனைப் (Robot) போல தான் இருந்திருப்போம்.

இந்த உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் நாம் எப்படி கையாளுக்கிறோம் என்பதின் அடிப்படையாய் தான் நம் வாழ்க்கையின் வெற்றியும், தோல்வியும் தீர்மனிக்கப்படுகிறது. நம்மை படைத்தவரின் நோக்கத்தை தாண்டி நாம் இந்த உணர்வையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்த முனையும் போது நம் வாழ்க்கை கசப்பு நிறைந்ததாய் மாறுகிறது. நம் சரீரத்தில் சுரக்கக்கூடிய ஹார்மோன்கள் தான் இந்த உணர்வுக்கும் உணர்ச்சிக்கும் அடிப்படை காரணமாக உள்ளது என்று மருத்துவமும், உளவியலும் கூறுகிறது. நம்மை படைத்த ஆண்டவர் தான் நம் சரீரத்திற்குள் இப்படிப்பட்ட ஹார்மோன்கள் சுரக்கும்படியாய் நம்மை படைத்திருக்கிறார்.

பொதுவாக இந்த உணர்வு மற்றும் உணர்ச்சியின் வெளிப்பாடு பதின்ம வயதில் (Teens) இருந்து அதிகமாகிறது. காரணம் என்னவென்றால், ஒரு குழந்தை பிறந்து பதின்ம வயதை எட்டும் வரை சரீரத்தின் வெளித்தோற்றம் ஒரு முழு வளர்ச்சியை அடைகிறது. இதன் பின்னர் தான் சரீரத்தின் உள் அவயவங்கள் வளரத் துவங்குகிறது. இந்த உள் உறுப்புகளின் வளர்ச்சி தான் நம் சரீரத்தில் ஹார்மோன்கள் சுரக்க காரணமாகின்றன. பிறந்தது முதல் தான் உணர்ந்திராத சில உணர்வுகளை உணர ஆரம்பிக்கிறான். புதுமையாய் அவனுக்கு தோன்றுகிற இந்த உணர்வுகளை எப்படி கையாள வேண்டும் என்று அறியாததினாலே தவறான பாதைக்கு நேராய் பயணிக்க நேரிடுகிறது.

நாம் ஒரு பொது வெளியில் இருக்கும்போது நாம் நம் சரீர உபாதையை கழிக்க வேண்டிய உணர்வு நமக்கு உருவாகும் பொழுது நாம் உடனே அதற்கு உடன்பட்டு செய்து விடுவதில்லை. மாறாக நாம் ஒரு பொது கழிப்பிடத்தை தேடுகிறோம், அது வரை அந்த உணர்வை கட்டுப்படுத்துகிறோம். அந்த உணர்வை சரியான விதத்தில் கையாளுகிறோம். அப்படி கையாள தவறுவோம் என்றால் தன் படுக்கையிலே தன்னை அறியாமல் தன் சரீர உபாதையை கழித்து அழும் ஒரு குழந்தையைப்போல காணப்படுவோம். எந்த சரீரத்தில் உணர்வை நம்மை படைத்தவர் கொடுத்திருக்கிறாரோ அதே சரீரத்தில் தான் அந்த உணர்வை கட்டுப்படுத்தக்கூடிய காரணியையும் கொடுத்திருக்கிறார். நம்மை படைத்த ஆண்டவர் குறித்த எல்லைகளுக்குள் நம்முடைய உணர்வையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தினால் அது ஆசீர்வதமாக இருக்கும். எல்லையைத் தாண்டும்போது அது தீமையாக மாறுகிறது.

இந்த உலகத்தை படைத்த ஆண்டவர் எல்லாவற்றிற்க்கும் ஒரு எல்லையை குறித்திருக்கிறார். அந்த எல்லைக்குள் அது ஆசீர்வதமாகவும், எல்லையை தாண்டும் போது

தீமையாகவும் மாறுகிறது. கடலுக்கு கரை என்ற எல்லையை வைத்திருக்கிறார். அது ஆசீர்வாதம். கரையை தாண்டி கடல் வரும் என்று சொன்னால் அது பேராபத்து. அதே போல நம்மை மென்மையாய் வருடும் தென்றலின் வேகத்திற்கு ஒரு எல்லையை குறித்திருக்கிறார். அந்த எல்லையை தாண்டி அதிவேகமாய் வீசும் காற்று புயலாக பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. நம்மை படைத்தவர் குறித்திருக்கிற எல்லைக்குள் நம்முடைய உணர்வையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தினால் அது ஆசீர்வதமாகவும், எல்லையை கடக்கும்போது பேராபத்தாகவும் மாறுகிறது. திருமணம் என்கிற உறவில் வெளிப்படுத்தப்பட வேண்டிய உன் வாலிபத்தின் உணர்வும், உணர்ச்சியும் அதற்கு முன்னரே வெளிப்படுத்தபடுவதால் உன் வாலிபத்தின் வீரியம் வீணாவது மாத்திரமல்ல அது உன் வாழ்க்கையின் விபரீதமகாவும் மாறிப்போகிறது. திருமணம் என்கிற எல்லைக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டிய உணர்வுகளும், உணர்ச்சிகளும் அந்த பந்தத்திற்கு, எல்லைக்கு வெளியே வெளிப்படுத்தப்படுவதால் உடைக்கப்பட்ட குடும்பங்களை அனுதினம் செய்தித்தாள்களில் வாசிக்கிறோம்.

நம்மை படைத்தவர் நாம் மகிழ்திருக்க வேண்டும் என்று நமக்கு ஆசீர்வதமாய் கொடுத்த இந்த உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் அவர் நமக்கு குறித்திருக்கிற எல்லையை மீறி வெளிப்படுத்தி அந்த ஆசீர்வாதத்தை இழந்துபோக வேண்டும் என்பதே பிசாசின் திட்டம். திருமணம் என்கிற உறவுக்கு முன்னரே இந்த உணர்வையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்த பிசாசு நம்மை இந்த வாலிப நாட்களில் தூண்டுவான். அவனுக்கும் அவன் திட்டத்திற்கும் இடம்கொடாமல் இந்த உணர்வை எனக்குள் வைத்த அதே ஆண்டவர் அதை கட்டுப்படுத்தக் கூடிய பெலனையும் எனக்கு கொடுத்திருக்கிறார் என்று அறிந்து செயல்பட வேண்டும். படைத்தவரும் பிழையற்றவர், அவர் படைப்புகளும் பிழையற்றது. படைப்புகளை பயன்படுத்துகிற நாம் தான் அவற்றை பிழையின்றி பயன்படுத்த வேண்டும்.

இந்தப்பிரதியை வாசித்துக்கொண்டிருக்கிற நீயும் உன் உணர்வையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதில் எல்லையைக் கடந்து சென்று கொண்டிருக்கலாம். இதை உணர்த்தவே இயேசு இன்று உன் முன் நிற்கிறார். அவராலே உனக்கென குறிக்கப்பட்ட எல்லைக்குள் நீ அடங்கியிருக்க தீர்மானித்தால் பின் வரும் வரிகளை உணர்ந்து வாசிப்பாயா

இயேசுவே, நீரே எங்களை உருவாக்கினீர் என்றும் நீரே எங்களுக்கு இந்த உணர்வையும், உணர்ச்சியையும் கொடுத்திருக்கிறீர் என்றும் அறிந்து விசுவாசிக்கிறோம். இது வரை நீர் எங்களுக்கு குறித்திருந்த எல்லைகளை மீறி அவைகளை வெளிப்படுத்தின பாவத்தை எங்களுக்கு மன்னியும். இனி அந்த பாவத்தை செய்யாதபடி நீர் நியமித்திருக்கிற எல்லைகளுக்குள் மாத்திரம் எங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி அந்த ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ள கிருபை தாரும். இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் எங்கள் பிதாவே. ஆமென்.